DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 30/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

| | |
|---|---|
| Name | திலிப்குமார் |
| Father / Husband Name | பவர்லால் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 21.**10.2024**

**குறுக்கு விசாரணை:**

1. நான் தற்போது தீபக் சூப்பர் மார்க்கெட் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு 2020 ம் வருடத்தில் இருந்து தெரியும். எதிரி கணபதி விலாஸ் ஓட்டல் நடத்தி வருகிறார். நான் ஓட்டலுக்கு தேவையான பொருட்கள் தினம் தினம் கொடுப்பதுண்டு. மாதத்திற்கு ரூபாய் 2 லட்சம் மதிப்புள்ள பொருட்களை கொடுத்துள்ளேன். மேற்படி பொருட்கள் விற்பனை செய்ததற்கான ரசீது எதிரியிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி பொருட்களுக்கு எதிரி பணம் கட்டியுள்ளதால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எதிரி எந்த காரணத்திற்காக என்னிடம் கடன் கேட்டார் என்றால் தெரியாது. எதிரி என்னிடம் மொத்தமாக 56 லட்சம் கடன் பெற்றுள்ளார். அதில் ரூபாய் 30 லட்சம் மற்றும் மீதம் ரூபாய் 26 லட்சம் பொறுத்து இரண்டு வழக்குகளாக தாக்கல் செய்துள்ளேன்.

2. மேற்படி தொகையை எவ்வாறு எதிரியிடம் செலுத்தினேன் என்றால் சிரிது சிரிதாக செலுத்தினேன். மொத்தமாக செலுத்தவில்லை. யார் முன்னிலையில் கடன் தொகையை கொடுத்தேன் என்றால் ஊர்காரர்கள் மற்றும் ஓட்டலில் வேலைசெய்தவர்களின் முன்னிலையில் கொடுத்தேன். மேற்படி நபர்களின் பேர் மற்றும் முகரியில் கொடுத்து எனது புகார் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரூபாய் 100 பாண்டு சம்மந்தமாக நிதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எதிரி என்னிடம் காசோலையை கொடுத்துவிட்டு ரூபாய் 100 பாண்டு பெற்றுக்கொண்டார். எனது புகார் மற்றும் வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி ரூபாய் 100 பாண்டு பெற்றுக்கொண்ட விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். ரூபாய் 100 பாண்டு என்னிடம் இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரிதான்.

3. வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது தான் அதனை எதிரிதான் நிரப்பி கொடுத்தார். காசோலை கொடுக்கப்பட்ட வங்கி கணக்கு எதிரியின் தனி கணக்கா அல்லது இணைப்பு கணக்கா என்று எனக்கு தெரியாது. 3 காசோலைகளும் 10.01.2024 ம் தேதியிட்டு எதிரி என்னிடம் கொடுத்தார். நான்

புரோநோட்டு செக்கியூரிட்டியாக மேற்படி 3 காசோலைகளை பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கணவர் என்னிடம் கடன் பெற்றுள்ளாரா என்றால் ஆமாம். இருவரும் என்னிடம் கடன் பெற்றார்கள். 05.05.2023 ம் தேதி என்னிடம் இருவரும் சேர்ந்துதான் கடன் பெற்றார்கள். எதிரியின் கணவர் 3 காசோலைகள் ரூபாய் 10 லட்சம் ரூபாய் 10 லட்சம் ரூபாய் 10 லட்சம் ஆக கொடுத்தார். எதிரியின் கணவர் புரோநோட்டு எழுதி கொடுத்தார். மேற்படி புரோநோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி புரோநோட்டு செக்கியூரிட்டிக்காக தான் காசோலையை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி புரோநோட்டை பெற்றுக்கொண்டுதான் 3 காசோலைகளை கொடுத்தார்கள்.

4. வழக்கறிஞர் அறிவிப்பில் 23.01.2024 ம் தேதி எதிரிக்கு அனுப்பினேன். எதிரிக்கும் அவரது கணவருக்கும் தனித்தனியாக அனுப்பியுள்ளேன். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்புகளில் எதிரி புரோநோட்டை பெற்றுகொண்டது குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பை நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கடன் கொடுத்த தொகையில் ரூபாய் 10 லட்சம் RTGS மூலம் செலுத்தியுள்ளேன். எனது வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் நீதிமன்றதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் இருந்து வந்த பதில் அறிவிப்பிற்கு மறு அறிவிப்பு எனது தரப்பில் அனுப்பினேனா என்றால் இல்லை. நான் மறு அறிவிப்பு அனுப்பாததால் பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் உண்மை என்றால் சரியல்ல. புரோநோட்டுக்கு கொலாடரல் செக்கியூரிட்டியாக காசோலைகள் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் எதிரி என்னிடம் அனைத்து தொகையையும் கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல. நான் வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு எவ்வாறு ரூபாய் 56 லட்சம் வருமானம் வந்தது என்றும் அதனை எவ்வாறு எதிரிகளுக்கு கொடுத்தேன் என்றும் குறிப்பிட்டு சொல்லைவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் நோக்கில் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.